**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**OS. 204/2023**

நாள்.14.10.2025

**வா.சா.1. பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

இந்த வழக்கின் வாதி ராஜா என்பவர் எனக்கு பெரியம்மா மகன் ஆவார். அவருக்காக இந்த வழக்கை நான் நடத்துகிறேன். இந்த வழக்கை நடத்துவதற்கு எனக்கு என்ன காரணத்திற்காக அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது என்று நான் தாக்கல் செய்துள்ள ஆணையுறுதி ஆவணத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கை பொறுத்தவரையில் இந்த வழக்கின் வாதி ராஜா என்பவருக்கு முழு விவரங்கள் தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கின் பிரதிவாதியை நான் முதல் முதலாக எங்கு வைத்து பார்த்தேன் என்றால் திருத்துறைப்பூண்டி, சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து பார்த்துள்ளேன். தாவா சொத்தானது எந்த கிராமத்திற்கு உட்பட்டு உள்ளது என்றால் தீவாம்பாள்புரம், வருவாய் கிராமத்தில் வரம்பியம் என்ற ஊரில் உள்ளது. தாவா சொத்தானது வரம்பியத்தில் இருந்து விட்டுக்கட்டி செல்லும் சாலையில் மெயின் ரோட்டில் இருந்து 100 மீ துாரத்தில் உள்ளது. தாவா சொத்தின் உடைய அரசாங்க மதிப்பு எவ்வளவு ரூபாய் என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. தாவா சொத்தானது மனைப் பிரிவாக உள்ளதா அல்லது சாகுபடி நிலமாக உள்ளதா என்றால் சாகுபடி நிலமாக உள்ளது. தற்போது வரை தாவா சொத்தை பிரதிவாதி தான் சாகுபடி செய்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தானது பிரதிவாதிக்கு யார் மூலமாக எப்படி கிடைத்தது என்றால் அதை பற்றி நான் தெரிந்து

கொள்ளவில்லை. பிரதிவாதிக்கு எத்தனை வாரிசுகள் உள்ளார்கள் என்றால் பிரதிவாதி என்னிடம் 2 மகன்கள் இருப்பதாக சொன்னார். மகள்கள் பற்றி என்னிடம் சொல்லவில்லை. தாவா சொத்தை அடமானம் வைத்து பதிவு செய்யும்போது சொத்தின் உரிமையாளரின் வாரிசு சான்றிதழை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். தாவா சொத்தின் ஒப்பந்தத்தில் பிரதிவாதி கைரேகை வைத்து கொடுத்தாரா அல்லது கையொப்பம் போட்டாரா என்றால் கையொப்பம் போட்டார். மேற்படி கையொப்பம் தமிழில் போடப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தில் அவருடைய மகன்கள் யாரிடமாவது சாட்சி கையொப்பம் வாங்கினீர்களா என்றால் அவருடைய மகன் கஜேந்திரன் என்பவர் கையொப்பம் செய்தார். மற்றொரு மகனிடம் கையொப்பம் வாங்கவில்லை. மற்றொரு மகன் ஊரில் இல்லை என்று சொல்லிவிட்டார். மற்றொரு சாட்சி பக்கிரிசாமி என்பவர் கையொப்பம் இட்டார். அவர் எந்த ஊரைச் சார்ந்தவர் என்றால் திருத்துறைப்பூண்டி குட்செட் தெருவைச் சேர்ந்தவர். அவர் தற்போது உயிரோடு இருக்கிறாரா என்றால் இல்லை இறந்துவிட்டார். தாவா சொத்தானது 2 ஏக்கர் 45 சென்ட் ஆகும். அப்படி என்றால் அந்த இடம் 734 குழி ஆகும். பொதுவாக கிராமப்புறங்களில் சாகுபடி நிலங்களை குழி கணக்கில் விலை பேசுவோம் என்றால் சரிதான். தாவா சொத்தை குழி கணக்கில் நான் விலை பேசாமல் மொத்தமாக விலை பேசினேன்.

**<u>பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.